**வீதித்துறை உதவிச் செயற்திட்டம் - 2013**

வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் (ஆர்எஸ்ஏபி) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடீஏ) இடையில் 2006 சனவரி 16 இல் கைச்சாத்திடப்பட்ட 4138–சீஈ ஆம் இலக்க அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.01 (பீ)(i) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின் தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) உள்ளதுடன் முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சான (எம்ஓஎச்&ஆர்) தற்போதைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு (எம்ஓஎச்பீ&எஸ்) நிறைவேற்று முகவர்களாக உள்ளன. வினைத்திறனான தேசிய வீதி முறைமையின் நிலைபேறான விநியோகத்தின் ஊடாக போக்குவரத்துச் செலவுகளைக் குறைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் யூ.எஸ்.டொலர் 100 மில்லியன் மற்றும் ரூபா 10,125 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 69,100,000 ஆக உள்ளதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், யூ.எஸ்.டொலர் 98.1 மில்லியன் மற்றும் ரூபா 11,579 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 59,600,000 ஆன மேலதிக ஒதுக்கீடு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 யூன் 23 ஆந் திகதிய 4429 சீஈ ஆம் இலக்க முதலாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2011 மார்ச் 15 இல் இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் 4906 சீஈ ஆம் இலக்க இரண்டாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் அதில் மீது யூஎஸ்டொலர் 100 மில்லியன் மற்றும் ரூபா 11,081 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 63,600,000 ஆன மேலதிக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆரம்பத்தில், செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2006 சனவரி 16 இல் தொடங்கியிருந்ததுடன் 2011 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்டக் காலமானது இரண்டாவது அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் படி 2014 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்குவதும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக்

கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் (ஜீஓஎஸ்எல்) மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட (டொலர்) கணக்குகளிற்கான ஆரம்ப வைப்பு, அவற்றிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததனவா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட (டொலர்) கணக்குகளிலிருந்தான பற்றுதல்களும் அவற்றிற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 4,936,882,103 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 32,113,493,499 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| **விபரம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2013** | **2012** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கிரயம் | 64,217,352 | 37,382,303 | 282,932,946 |
| சிவில் வேலைகள் | - | - | 22,545,175,549 |
| சிவில் நடைபெறும் வேலைகள் | 468,184,471 | 2,935,852,461 | 3,476,245,967 |
| வடிவமைப்பு ஆலோசனை | - | - | 122,604,638 |
| செயற்திட்டம் மற்றும் ஏனைய ஆலோசனை | 22,327,897 | 18,616,519 | 127,557,404 |
| நிர்மாண மேற்பார்வை | 667,713,673 | 17,215,520 | 684,929,194 |
| செயற்திட்டச் செலவினம் | 94,264,520 | 161,978,284 | 600,471,063 |
| பயிற்சி | 7,432,859 | 17,478,447 | 74,558,387 |
| பயன்பாட்டு சேவைகள் மீளமைப்பு | 186,319,135 | 7,084,035 | 501,676,989 |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 3,426,422,196 | 332,379,261 | 3,697,341,362 |
| | 4,936,882,103 | 3,527,986,831 | 32,113,493,499 |

## 4.2 விசேட (டொலர்) கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மூன்று உடன்படிக்கைகளிற்காகவும் இலங்கை மத்திய வங்கியில் மூன்று விசேட (டொலர்) கணக்குகள் பேணப்பட்டிருந்தன. சம்பந்தப்பட்ட கணக்குகளின் செயற்பாடுகள்

மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவற்றிற்கான மீதிகள் என்பன கீழே பொழிப்பாகத் தரப்படுகின்றன.

| | 4429 சீஈ | | 4138 சீஈ | | 4906 சீஈ | |
|---|---|---|---|---|---|---|
| **விபரங்கள்** | **ஐ.அ.டொலர்** | **இலங்கை ரூபா** | **ஐ.அ.டொலர்** | **இலங்கை ரூபா** | **ஐ.அ.டொலர்** | **இலங்கை ரூபா** |
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 9,113,859 | 1,158,925,538 | 377,195 | 47,964,399 | 560,768 | 71,307,692 |
| கூட்டு:- | | | | | | |
| மீள் நிரம்பல்கள் | - | - | 34,735,300 | 4,425,946,399 | 1,436,203 | 181,305,441 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 6,579,837 | - | 120,202,275 | - | 5,302,768 |
| | 9,113,859 | 1,165,505,375 | 35,112,495 | 4,594,113,073 | 1,996,971 | 257,915,901 |
| கழி:- | | | | | | |
| மீளெடுப்புக்கள் | 7,930,387 | 1,010,762,966 | 14,464,036 | 1,894,265,046 | 1,682,903 | 216,850,615 |
| வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | - | - | - | - | - | - |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 1,183,471 | 154,742,409 | 20,648,460 | 2,699,848,026 | 314,068 | 41,065,286 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 இலிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 224,228,425 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மாற்றப்பட்டிருந்த போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு நிலையான சொத்துக்களின் தேறிய பெறுமதி மாற்றப்படாது அவை தொடர்ச்சியாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டத்தால் மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீதி பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியம் (ஆர்எம்ரீஎம்) என்பவற்றிற்கு முறையே ரூபா 188,910,898 மற்றும் ரூபா 66,094,176 பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தன. ரூபா 31,365,750 தொகை நிதிக்கூற்றுக்களில் நலனாளிகளின் கீழ் சொத்துக்கள் மாற்றப்பட்ட பெறுமதியை காட்டுவதற்குப் பதிலாக செயற்திட்டத்தின் நடைபெறும் வேலையின் கீழ் பெறுமானத்தேய்வாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) இங்கிரிய- இரத்தினபுரி வீதியால் செயற்திட்டத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கின் நடுவர் தீர்ப்பில் நிகழத்தக்க பொறுப்புக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்படவோ அல்லது வெளிப்படுத்தவோ இல்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட்ட ரூபா 3,303,631 பெறுமதியான வேலைகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் அட்டுறு செலவினத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திற்கு ஜீஜ குழாய்கள் விநியோகிப்பதற்காக ரூபா 6,987,238 ஆன மீதிக் கொடுப்பனவுகளிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை பதவியணி தொடர்பில் ரூபா 327,530 ஆன ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மற்றும் ரூபா 1,076,276 ஆன மேந்தலைச் செலவினம் என்பன வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வேண்டுகையில் செயற்திட்டத்தால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது 2003 யூன் 02 ஆந்திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 8.6 ஆம் பிரிவுகளில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி செயற்திட்டத்திடமிருந்து அத்தகைய செலவினத்தை அறவிடுவதற்கு தகுதியற்றிருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிப் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு மற்றும் மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நிதியளிப்புத் திட்டம் | வெளிநாட்டுக் கூறுகளின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) |
| **ஐடிஏ அபிவிருத்தி** | | | | |
| கடன் இலக்கங்கள்: | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4138 சீஈ | 100.0 | 10,125 | 74.1 | 9,642 |
| 4429 சீஈ | 98.1 | 11,579 | 82.9 | 10,775 |
| 4906 சீஈ | 100.0 | 11,081 | 35.4 | 4,597 |
| நாணமாற்று வித்தியாசம் | | | 3.0 | 392 |
| இலங்கை அரசாங்கம் | | | 51.6 | 6,707 |
| மொத்தம் | 298.1 | 32,785 | 247 | 32,114 |

## 6.2 ஒப்பந்த நிர்வாகம்

கந்தளாயிலிருந்து திருகோணமலை வரை 190+000 கிமீ முதல் 199+300 கிமீ (கேரீ 04) வரை அம்பேபுஸ்ஸ – குருநாகல்- திருகோணமலை வீதி (ஏ06) 9.3 கிமீ இன் புனரமைப்பு.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திருகோணமலை கடற்பகுதி, கடற்கரைப் பகுதி மற்றும் சுற்றுவட்டப்பகுதி என்பவற்றிக்கு பாதுகாப்பு வேலியைப் பொருத்துவதற்கு அளவைப்பட்டியலில் (பீஓகியூ) ரூபா 6,350,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் 1,723 மீற்றர்கள் ரூபா 25.8 மில்லியன் கிரயத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 1,723 மீற்றரில், 78 சதவீதத்திற்கு சமமான 1,453 மீற்றர்கள் குறைபாடுகளுக்குப் பொறுப்புக்கூறும் காலத்திற்குள் துருப்பிடித்திருந்தது. எனினும், குறைபாடுகள் திருத்தப்பட்டிராததுடன் பிடி காசிலிருந்து திருத்தற் கிரயமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், தரமான வேலைக்காக வடிவமைப்பு, படவரைவுகள் மற்றும் குறிப்புரைகள் போதியளவு விரிவானதாக இருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சிங்கள மஹா வித்தியாலயத்தில் இருக்கின்ற சுவர் நிர்மாணத்திற்காக முரண் கட்டளை இல- 02 இல் பூச்சு வேலைக்காக ரூபா 450,000 தொகை உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் சுவர் பூச்சு வேலை செய்யப்பட்டிருக்காத போதிலும் ஒப்பந்தகாரருக்கு பூச்சு வேலை உள்ளடங்கலாக ரூபா 3.06 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது

(இ) ஐபிசீ இல 16 ஆல் 541 குறியீட்டுப் பலகைகள் பொருத்துவதற்காக ரூபா 8,115,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுப் பரிசோதனையில் 480 குறியீட்டுப் பலகைகள் மாத்திரம் பொருத்தப்பட்டிருந்ததுடன் செய்யப்பட்டிருக்காத வேலைக்காக ரூபா 915,000 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை வெளிப்பட்டது.

## 6.3. சிவில் நடைபெறும் வேலை

மலிபன் சந்தி முதல் குருஷா சந்திவரை 5.286 கி.மீற்றர் மற்றும் பாணந்துறை பாலம் முதல் கொழும்பு குருஷா சந்தி- காலி- ஹம்பாந்தோட்டை- வெல்லவாயா வீதி வரை 11.76 கிமீ இன் புனரமைப்பு மற்றும் முன்னேற்றம் குறைநிரப்பு உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐசீரீஏடி இன் நியம கேள்வி ஆவணத்தின் 2 மற்றும் 6 ஆம் பிரிவுகள், குறித்த நிபந்தனையின் 14.2 ஆம் பிரிவு மற்றும் ஒப்பந்த நிபந்தனையின் 2 மற்றும் 6 ஆம் பிரிவுகள் என்பவற்றின் பிரகாரம் வேலை ஆரம்பிப்பதற்கு வேண்டப்பட்ட இயந்திரம், உபகரணம் மற்றும் ஆளணி உள்ளதென்பதை உறுதிப்படுத்துவதற்கு திருப்திகரமான சான்றாக லொட் 01 மற்றும் லொட் 02 இற்கான புறம்பான விரிவான தொழிலாரம்பிப்பு பட்டோலை வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் லொட் 01 மற்றும் லொட் 02 இன் இரண்டு வேலைத்தளங்களிற்காக ஒரு பட்டோலை மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு முரணாக இரண்டு வேலைத்தளங்களிற்கான தொழில் ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 724,515,375 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், ஊழியர் போன்ற கிடைக்கக்கூடிய வளங்கள் இரண்டிற்குப் பதிலாக ஒரு வேலைத்தளத்திற்கு மாத்திரம் வேண்டப்பட்ட வளங்களை வழங்கிய ஒப்பந்தகாரரிடமிருந்து லொட் 01 இன் கீழான ஒப்பந்தத்திற்காக இவை ஈடுபடுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், ஒப்பந்த உடன்படிக்கையின் படி, தேவையான வளங்களை ஒரே தடவையில் இரு பகுதிகளுக்கும் வழங்குவதன் மூலம் லொட் 01 மற்றும் லொட் 02 இன் கீழான ஒப்பந்தங்கள் குறியீட்டுப் தேவைப்பட்ட வளங்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டியதுடன் தேவைப்பட்ட வளங்களை வழங்கியிருக்காதத்தின் விளைவால் லொட் 02 இன் கீழான ஒப்பந்தத்தின் முன்னேற்றம் மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட 28 சதவீதத்திற்கு எதிராக 7.8 சதவீதமாக இருந்தது.

(இ) தரமதிப்பீட்டுத் திட்டத்தின் 2, 3, 4, 5 6 மற்றும் 7 ஆம் பந்தியின் பிரகாரம் வேலைத்தளத்திற்கு வழங்கப்பட்ட பொருட்கள் தரமான நிலையில் உள்ளதா எனவும் வேலைக்கு அவை ஏற்றவையா என்பதை மதிப்பிடுவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய குறித்த அளவீட்டுத் தரச்சான்றிதழ் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராமையால் வீதி நிர்மாண வேலைகளிற்கு உரிய பொருட்களிற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டுப்பாட்டு அளவீடுகள் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்குறிப்பிட்ட 13 ஆம் பிரிவின் அறிவுறுத்தல் பிரகாரம், லொட் 01 மற்றும் லொட் 02 வேலைத்தளத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் வெவ்வேறாக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தரச்சான்றிதழ் திட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், ஒப்பந்தக்காரர் நாளாந்தம் பொருட்களின் மாதிரிப் பரிசோதனை மேற்கொண்டு தோல்வியானமை இணக்கமற்ற அறிக்கையில் பதிய வேண்டும். ஒப்பந்தக்காரர் பொருட்களின் நாளாந்த மாதிரி பரிசோதிப்பு முறைமையை பின்பற்றியிருந்த போதிலும் ஒத்திருக்காதவை அறிக்கையிடல் முறைமை பின்பற்றியிருக்கவில்லை. இதன்விளைவால், மாதிரிப் பரிசோதிப்பில் அவதானிக்கப்பட்ட தவறுகளை ஒப்பந்தக்காரர் திருத்தியிருந்தார் என்பதை உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூலச் சான்றுகளெதுவும் இருக்கவில்லை. தரச் சான்றிதழ் முறையை ஒப்பந்தகாரர் பின்பற்றியிருக்காத போதிலும் செயற்திட்டத்தின் 02 மேற்பார்வை ஆலோசனையாளர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி ரூபா 1,699,296 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 6.4. ஆலோசனை கொடுப்பனவு

திருகோணமலையில் அமைந்திருந்த செயற்திட்ட ஆலோசனைப் பிரிவு (பிசீயூ) 17 பிரதான உத்தியோகத்தர்களையும் 25 உதவி உத்தியோகத்தர்களையும் கொண்டிருந்தது. 50 சதவீத செயற்திட்ட படிக்கு தகுதியான பதவியணிக்கு செயற்திட்டத்திலிருந்து மேலதிக நேரக் கொடுப்பனவு தகுதியற்றிருந்த போதிலும் 50 சதவீத செயற்திட்டப் படிப்பணத்தை பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 909,159 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 6.5. செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு

செயற்திட்டமானது செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுக்கு (பிசீயூ) முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் 12 பிரதான உத்தியோகத்தர் மற்றும் 20 உதவி உத்தியோகத்தர்களையும் சேர்த்திருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் பதவியணி, உள்ளக ரீதியாக விண்ணப்பங்களை கோருவதன் மூலம் தற்காலிக அடிப்படையில் விடுவிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களை கொண்டிருந்தது. எவ்வாறாயினும், 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 2.2.7 ஆம் பந்தியின் பிரகாரம், வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கு விசேட பதவிகளுக்கு மிகத் திறமை வாய்ந்த நபர்களை நியமிக்கக்கூடிய வகையில் பொது அறிவித்தல் ஊடாக பதவியணி நியமிக்கப்பட வேண்டும்.

(ஆ) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 4.1.1 ஆம் பிரிவின் பிரகாரம், அரச நிறுவகங்களில் உத்தியோகத்தர்கள் சம்பளமற்ற விடுமுறையில் முழு நேர அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையில் செயற்திட்டத்திற்கு

இணைக்கப்படுகையில் தாம் வகிக்கும் நிரந்தர பதவியின் சம்பளத்தின் 50 சதவீத மேலதிக படிக்காக தகுதியுடையவர். எவ்வாறாயினும், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு மற்றும் செயற்திட்ட ஆலோசனைப் பிரிவு என்பவற்றிற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து தற்காலிய அடிப்படையில் விடுவிக்கப்பட்ட 34 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 4.83 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் சேவைக் காலத்திற்காக மதிப்பிடப்பட்ட பணிக்கொடை தொகை செயற்திட்டத்தால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழமைபோல் அனுப்பப்பட்டிருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவில் கடமையாற்றிய சேவைக் காலத்திற்குப் பதிலாக அவர்களின் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் மொத்த சேவைக் காலமும் உள்ளடக்கப்பட்டு பணிக்கொடையின் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகவே, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 22 பதவியணியினருக்காக 2013 திசெம்பர் 31 வரை ரூபா 4.7 மில்லியன் மேலதிகக் தொகை அதிகாரசபைக்கு அனுப்பப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய 08 ஆண்டுகளின் போது காலத்துக்காலம் செயற்திட்ட பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளூர் ஆலோசனையாளர்கள் போன்ற அத்தகைய செயற்திட்டத்தின் பிரதான பதவிக்காக பல்வேறு நபர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அமுலாக்கல் முகவரான வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வழமைபோல், அனுபவம் மற்றும் நிதி நலன்களை செயற்திட்டத்திற்காக வழங்கும் நோக்கில் செயற்திட்டத்திற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்தனரென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எனவே, செயற்திட்டத்தின் முறையான செயற்பாட்டை சுமூகமாக செயற்படுத்தி செயற்திட்டம் நெருக்கமான கண்காணிப்பு தொடர்பாக குறைவான முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது.

(உ) பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் செயற்திட்டத்தின் பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், இரண்டு கணனி செயற்படுத்துனர்கள் மிகையாக சேர்க்கப்பட்டிருந்ததுடன் உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 984,000 செலுத்தப்பட்டிருந்தது.

### 6.6. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

மீளாய்வாண்டிற்காக செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவின் நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அச் சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு,

மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும் செயற்திட்டத்தால் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6.7 மோட்டார் வாகனங்களின் பாவனை

செயற்திட்டமானது 06 வாகனங்களின் குத்தகைக்காக சேவை வழங்குநர் ஒருவருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வாடகைக் கட்டணங்களாக ரூபா 3,799,600 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ஒரு மாதத்திற்கு ஓடவேண்டிய கிலோமீற்றர் அவ் வாகனம் ஓடியிராமை அவதானிக்கப்பட்டது. இதன்படி ஓடுவதற்கு உடன்பட்ட ஆகக் குறைந்த அளவைப்பார்கிலும் 37,934 கிலோமீற்றர்கள் குறைத்துப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 814,317 தொகை வாகன வாடகையாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் போது வெளியிலிருந்து மேலதிக வாகனங்களிற்கு ரூபா 394,002 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 6.8 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க சுற்றறிக்கையின் vii ஆம் பின்னிணைப்பின் 5.6.14 ஆம் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் படி, செயற்திட்டதால் கடனிற்கான மீளளிப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் முகாமைத்துவ அறிக்கையில் செயற்திட்ட முகாமைத்துவ அலகின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. செயற்திட்ட முகாமைத்துவ அலகின் முகாமைத்துவம்
ii. சொத்துக்கள் முகாமைத்துவம்
iii. ஒப்பந்த நிர்வாகம்
iv. பொருளிருப்புக் கட்டுப்பாடுகள்